

# பிரின்சஸ் பிளவுஸ்

*அதுக்கான உங்க பிளவுஸ நீங்களே தைச்சுக்க இதோ ஸ்டெப்-பை-ஸ்டெப் டுடோரியல் உங்களுக்காக.*





**தேவைப்படும் பொருள்கள்**

பிளவுசுக்கு 1 மீட்டர் பிரின்டட் துணி
லைனிங்குக்கு 1 மீட்டர் மேட்சிங் துணி
பிரின்சஸ் பிளவுசுக்கான டெம்ப்ளேட்டை நீங்க எங்க www.ushasew.comங்கற வெப்சைட்டிலிருந்து டவுன்லோட் செய்துக்கலாம்
சாக்
கத்தரிக்கோல்
மேட்சிங் நூல்
மேட்சிங் பைப்பிங் 2 மீட்டர்
மணிகோர்த்த பின்
ஸ்கேல்
உஷா ஜானோம் பைப்பிங் ஃபூட்
8 அங்குல கன்சீல் பண்ணப்பட்ட ஜிப்பர்
உஷா ஜானோம் ஜிப்பர் ஃபூட்
ஹூக் அப்புறம் ஐ செட்
மற்றும் கை ஊசி.





இந்த டுடோரியல்ல, நாம டெம்ப்ளேட் மார்க்கிங் அப்றம் துணி கட்டிங், பின், முன்பக்க பீஸ்களை உருவாக்குதல், ஷோல்டர்ஸ தைச்சு அவற்றை ஒன்றா இணைக்கறது, நெக்லைன்ல பைப்பிங், பயாஸ் ஸ்ட்ரிப் அட்டாச் பண்றது, ஸ்லீவ்ஸ தயாரிச்சு அட்டாச் பண்றது, சைட் சீம்ஸ ஃபினிஷ் பண்றது, ஜிப்பர் அட்டாச் பண்றது, அப்றம் கடைசில பட்டம் ஹெம் பண்ணிட்டு, நெக்லைன் ஃபினிஷ் பண்றது எல்லாத்தையும் கத்துப்போம்.





ஸ்டெப்1: டெம்ப்ளேட் மார்க்கிங் மற்றும் துணி கட்டிங்

உங்க சேலைக்குப் பொருத்தமா உங்களுக்கு பிடிச்ச ஸ்டைலிஷ் துணிய தேர்ந்தெடுத்து முழுசா அதை விரியுங்க. இதுதான் ரைட் சைட். இப்ப துணிய பாதியா நீளவாக்குல மடிங்க, ரைட் சைட், ரைட் சைட்-அ நோக்கி இருக்கணும்.





இப்ப நாம www.ushasew.com வெப்சைட்டிலிருந்து டவுன்லோட் செய்த பிரின்சஸ் பிளவுஸ் டெம்ப்ளேட்களை துணிமேல வைக்கணும். முன் பக்கம்னு மார்க் செய்த ரெண்டு டெம்ப்ளேட்ஸ்லேந்து தொடங்கலாம். அப்புறம், பின்பக்கத்தையும் ஸ்லீவ்ஸயும் வையுங்க. இதுல குறிப்பிட்டிருக்க மாதிரி முதல் முன் டெம்ப்ளேட்ட மடிப்புல வைக்கறதை உறுதி செய்துக்கங்க. பின் டெம்ப்ளேட்டும்கூட மடிப்புலதான் வரும். இப்ப இந்த எல்லா டெம்ப்ளேட்ஸயும் அதனதன் இடத்தில் வைச்சு மணிகோர்த்த பின்ஸ் வெச்சு பின் பண்ணலாம். பின் பண்றப்ப துணியோட ரெண்டு அடுக்குலயும் பின் நுழையுதான்னு பாத்து உறுதி செய்துக்கணும். எல்லா பீஸ்களையும் பின் பண்ணி முடிச்சதும், இந்த டெம்ப்ளேட்ஸ துணில ட்ரேஸ் பண்ணனும். இதுக்கு ஒரு சாக் துண்டு யூஸ் பண்ணுங்க. எல்லா டெம்ப்ளேட்ஸயும் கை நடுக்கமில்லாம மார்க் பண்ணுங்க, வளைவு, விளிம்புகள்ல கூடுதல் கவனம் செலுத்துங்க.




















துணி மேல டார்ஸ்க்கு எல்லா நோட்சஸ்லயும் பாயின்ட்ஸயும் மார்க் பண்ண மறக்காதீங்க. மார்க் பண்ணி முடிச்சதும், ஒவ்வொரு டெம்ப்ளேட்டா பின்-அ நீக்குங்க. பின்ஸ நீக்கறப்ப, காயம் பட்டுக்கறதை தவிர்க்க, பின் குஷன்ல பின்ஸ் வைக்கணும். பின்ஸ் நீக்கின பிறகு, டெம்ப்ளேட்ஸ தனியா வையுங்க.
நம்ப டெம்ப்ளேட்ஸ கட் பண்ணி எடுக்கறப்ப துணி ஸ்டடியா ஒரே இடத்தில் இருக்க மறுபடியும் பின் பண்ணுவோம். துணிய ஸ்டடியா வெச்சிருக்க 1-2 பின்ஸ யூஸ் பண்ணுங்க. அப்றம் கத்தரிக்கோலை எடுத்து கட் பண்ண ஆரம்பிங்க. முன் பீஸ்லேந்து தொடங்கி நேரா பேக் பீசுக்கு போய் அப்பறம் ஸ்லீவுக்கு போங்க.

நீங்க பீஸ்களை கட் பண்ணின பிறகு லைனிங் துணிய எடுத்துகிட்டு இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. ஒவ்வொரு டெம்ப்ளேட்டுக்கும் ரெண்டு பீசஸ் நீங்க வெச்சிருக்கணும், ஒன்னு மெயின் பிளவுஸ் துணி இன்னொன்னு லைனிங் துணி.

ஸ்டெப் 2: பின்பக்கம் டார்ட்ஸ் உருவாக்குதல்

முதல்ல நாம டெம்ப்ளேட் வேலைய பாக்கலாம். பின் பகுதியோட மெயின் துணியையும் அதுக்கான லைனிங் துணியையும் எடுங்க. நாம டார்ட்ஸ்காக மார்க் பண்ணின ரெண்டு நோட்சஸ் அப்புறம் ஒரு டாட்-அ நீங்க பாக்கலாம். ஒரு முக்கோணத்தை உருவாக்க இந்த பாயின்ட்ஸ ஜாயின்ட் பண்ணுங்க. நாம இதை பின் பீசோட இடது பக்கத்திலயும்கூட உருவாக்கணும். இதைச் செய்ய, ஒரு பின் எடுத்துட்டு துணியோட ரெண்டு அடுக்குகள் வழியா சொருகறது மூலம் பின் பக்கத்தில் சென்டர் டார்ட் பாயின்ட்ட மார்க் பண்ணுங்க. விளிம்புல துணிய அலைன் பண்ணி, பாட்டம்ல பாயின்ட் உள்ள இடத்தில நோட்சஸ் உருவாக்கணும். சென்டர் பாயின்ட் அப்றம் இந்த நோட்சஸயும் ஒரு ரூலரால ஜாயின் பண்ணனும். இப்ப பின் பீசோட இடது மற்றும் வலது பக்கமும் ஒரு டார்ட் இருக்கும். இதே பிராசஸ லைனிங் துணிக்கும் ரிபீட் பண்ணுங்க.

இப்ப துணிய உஷா ஒன்டர் ஸ்ட்ரிச் பிளஸ் தையல் மிஷினுக்கு கொண்டு போகலாம். இப்ப நாம டார்ட்ஸ மெயின் துணியோட ஒரு சைட்-ல கொண்டு போகலாம். துணிய விரிச்சு இதுல காட்டி இருக்க மாதிரி நோட்சஸ மேட்ச் பண்ணுங்க. பிரஸ்ஸர் ஃபுட்டுக்கு அடியில மடிச்ச லையனை அலைன் பண்ணுங்க. தைக்க ஆரம்பிக்கறதுக்கு முன்னால, பேட்டன் செலக்டார் டயலை நேர்தையலுக்கு 'ஏ'க்கும் தையல் நீளத்தை 2.5க்கும் செட் பண்ணுங்க. லைன் மேல சீராவும், துல்லியமாவும் தையுங்க. ஆரம்பத்திலயும் முடிக்கறப்பவும் ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போடுங்க இது முடிஞ்சதும், இன்னொரு பக்கத்தில உள்ள டார்ட்ஸ்க்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுவோம். நோட்சஸ மாட்ச் பண்ணிட்டு லைன் மேல தையுங்க. எல்லாத்துக்கும் ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போட மறந்துடாதீங்க.

இப்ப மெட்டீரியல ஃப்ளிப் பண்ணி தையலை ஃபிளாட்டன் பண்ண மெதுவா அழுத்துங்க. லைனிங் துணிலயும்கூட டார்ட்ஸ தைக்க இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. இது முடிஞ்சதும், க்ரீசஸ உருவாக்க தையலை மென்மையா அழுத்தணும். பின் பீசஸ தனியா வையுங்க.





















## ஸ்டெப் 3: பிளவுசின் முன்பக்கத்தை தயார் செய்தல்

எல்லா முன் பீசஸயும் வெளிய கொண்டு வாங்க. இதுதான் நம் மெயின் துணி, இது லைனிங் துணி. இதோ மெயின் துணில டெம்ப்ளேட்ட யூஸ் பண்ணி நாங்க ஒரு மார்கிங் உருவாக்கி இருக்கோம், டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி அங்க ஒரு நோட்ச்-அ உருவாக்கணும். அதே போல மெயின் துணியோட ரெண்டாவது பகுதிலயும் நோட்ச் உருவாக்குங்க. பின்ஞ்ச் பண்ணி கட் பண்ணுங்க.

ரெண்டு லைனிங் பீசஸ்லயும் அதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. மெயின் துணிலேந்து பின்னை நீக்கிட்டு அதை ஓபன் பண்ணுங்க. டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி அதை அரேஞ் பண்ணுங்க. உங்ககிட்ட ஒரு சென்டர் போர்ஷனும் ரெண்டு சின்ன போர்ஷனும் இருக்கணும் இது ரெண்டு பக்கங்களையும் உருவாக்கும். ரெண்டு துணிலயும் நோட்சஸ மேட்ச் பண்ணி இதுல காட்டி இருக்க மாதிரி ரெண்டாவது பகுதிய முதல் பகுதி மேல வையுங்க - ரைட் சைட், ரைட் சைட்-அ நோக்கி இருக்கணும். இதை சரியான இடத்தில பின் பண்ணுங்க. ஆர்ம் ஹோல் வர்ற வரை மீதி உள்ள துணிகளை நாம பின் பண்ணனும். இதுல காட்டி இருக்க மாதிரி விளிம்புகளை பின் பண்ணனும். இதே பிராசஸ இன்னொரு பக்கத்துக்கும் ரிபீட் பண்ணுங்க. நோட்சஸ மாட்ச் பண்ணி துணிய சரியான எடத்தில பின் பண்ணுங்க. மீதி உள்ள எட்ஜசையும் அலைன் பண்ணி அவற்றை பின் பண்ணுங்க. பின் பண்ணின ரெண்டு பகுதிகளையும் மென்மையா ஓபன் பண்ணினா, முன், பின் பக்கம் பாக்க இப்படி இருக்கணும்.

இதே மாதிரி நாம லைனிங் துணியையும் அரேன்ஜ் பண்ணிகிட்டு பின் பண்ணுவோம். நீங்க பின் செய்த ரெண்டு துணியும் பாக்க இப்படி இருக்கணும். இப்ப பீசஸ தைக்கலாம். முதல்ல, மெயின் துணிய எடுத்துக்கலாம். பின் செய்த பக்கங்கள்ல ஒன்னை எடுத்து பிரஸ்ஸர் ஃபூட் அடியில வெச்சு தைக்க ஆரம்பிங்க. கீழ்ப் பக்கமா தைச்சிட்டே பின்ஸ நீக்கிட்டே போங்க. தையல் பாக்க இப்படி இருக்கணும். இப்ப இன்னொரு பக்கத்தை தையுங்க. பின்ஸ நீக்கிட்டு தைக்க ஆரம்பிங்க. இப்ப பாருங்க நாம ரெண்டு பக்கங்களையும் தைச்சிட்டோம். இப்ப மெயின் துணிய தனியா வெச்சிட்டு லைனிங்க எடுத்துக்கலாம்.

மெயின் துணி மாதிரியே லைனிங் துணியோட பீசஸயும் நாம ஜாயின் பண்ணுவோம். ரெண்டு பக்கத்துலயும் தையுங்க, தைக்கிறப்ப பின்ஸ எடுக்க மறக்காதீங்க. நேர் தையல் போடறப்ப எல்லாம் தையல் பிரியாம இருக்க ஆரம்பத்துலயும் முடிக்கறப்பவும் முழுக்க ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போட மறக்காதீங்க. இது முடிஞ்சதும், நாம உடுத்திக்கும்போது, வட்ட துணி படிஞ்சு இருக்கறதை உறுதி செய்துக்க நாம சீம் அலவன்ஸ் மேல நோட்சஸ் உருவாக்கணும். நோட்சஸ் உருவாக்கும்போது தையலை கட் பண்ணாம இருக்கறதை உறுதி செய்துக்கணும். நாம லைனிங் அப்றம் மெயின் துணி ரெண்டுலயும் நோட்சஸ் உருவாக்கணும்.

நம்ப முன் பீசஸ் ஏற்கெனவே ஜாயின் ஆகி ரெடியா இருக்கறதை நீங்க பாக்கலாம். இப்ப நம்ப தையல் மேல அயர்ன் பண்ணி சீம்ஸ் நல்லா செட் ஆகி, பாக்க அதிக பாலிஷ்டா, அதிக புரொஃபஷனலா இருக்கறதை உறுதி செய்துக்கணும். மெயின் துணியோட முன், பின் பக்கங்களை அயர்ன் பண்ணனும். பின் பக்கத்தை அயர்ன் பண்றப்ப அதிகப்படியான சீம் அலவன்ஸ ஓபன் பண்ணிட்டு அயர்ன் பண்ணுங்க. இதையே லைனிங் துணிக்கும் செய்யுங்க. அயர்ன் பண்ணும்போது ரொம்ப கவனமா, பாதுகாப்பா இருக்கணும்.













ஸ்டெப் 4: ஷோல்டர்ஸ் தைத்து முன், பின் பக்க பீஸ்களை இணைத்தல்

இது முடிஞ்சதும், இதுல காட்டிருக்க மாதிரி முன் பீசஸ விரிச்சு அதுக்கு மேல பின் பீசஸ வையுங்க, ரைட் சைட், ரைட் சைட்-அ பாத்த மாதிரி இருக்கணும். முன், பின் பீசஸ ஒன்றா அட்டாச் பண்ண மெயின் துணியோட ஷோல்டர்ஸ இப்ப நாம தைக்கணும். மணி கோர்த்த பின்ஸ வெச்சு ஷோல்டர்ஸ ஒன்ணா சேர்த்து பின் பண்ணனும். இதே பிராசஸ லைனிங் துணிலயும் ரிபீட் பண்ணுங்க. பீசஸ உஷா ஒன்டர் ஸ்ட்ரீச் பிளஸ் தையல் மிஷினுக்கு கொண்டு போய் முதல்ல மெயின் துணியோட ஷோல்டர்ஸ தைக்க ஆரம்பிங்க. பிரஸ்ஸர் ஃபூட் எட்ஜ்ல ஷோல்டர்ஸ அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. ஆரம்பத்திலயும் முடிக்கறப்பவும் ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போட மறக்காதீங்க. பின்-அ நீக்கிட்டு இதையே இன்னொரு ஷோர்டருக்கும் ரிபீட் பண்ணுங்க. நேர் தையல் முடிஞ்சதும், துணி விளிம்புல நூல் தொங்கிட்டு இருக்கறதை தவிர்க்க ஷோல்டர்ல ஜிக் ஜாக் தையல் போடணும். பேட்டன் செலக்டார் டயலை 'சி'க்கு செட் பண்ணிகிட்டு தையல் நீளத்தை 1.5ல வெச்சிட்டு ஷோல்டர்ஸ்ல மறுபடியும் தையுங்க. ஜிக் ஜாக் தையல் போடறப்ப ரிவர்ஸ் ஸ்ட்ரிச் தேவையில்லை. நீங்க தைச்சு முடிச்சது பாக்க இப்படி இருக்கணும்.

லைனிங் துணிக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. நீங்க தைச்சு முடிச்சது பாக்க இப்படி இருக்கணும்.



















ஸ்டெப் 5: பைப்பிங் மற்றும் பயாஸ் ஃபேசிங்கை நெக்லைனுடன் அட்டாச் செய்தல்

நாம ஏற்கெனவே ஷோல்டர்ஸ மெயின், லைனிங் ரெண்டு துணிலயும் அட்டாச் பண்ணிட்டோம் பாருங்க. ரெண்டு பீசஸயும் ஓபன் பண்ணி மெயின் துணிய லைனிங் துணி மேல வையுங்க, ராங் சைட், ராங் சைட்-அ பாத்துட்டு இருக்கணும். ரெண்டு சைட்லயும் ஷோல்டர்ஸ மாட்ச் பண்ணி, சரியான இடத்தில வைச்சு பின் பண்ணுங்க. நெக் ஃபினிஷிங்குக்கு, பைபிங்கையும் ஒரு பயாஸ் ஸ்ட்ரிப்பையும் வெளிய எடுங்க. ஒரு பயாஸ் ஸ்ட்ரிப்ப தயாரிக்க நீங்க எங்க www.ushasew.comங்கற வெப்சைட்ல டென்ட் டிரஸ் டுடோரியலுக்கு விசிட் பண்ணுங்க. பயாஸ் ஸ்ட்ரிப்பை பாதியா மடியுங்க. பைபிங் மேல பயாஸ் ஸ்ட்ரிப்ப ஓவர்லாப் செய்து நெக்லைனோட ரைட் சைட்ல அதை வையுங்க. அதை அந்த இடத்தில நாம தைப்போம்.

துணிய மிஷினுக்கு கொண்டு போய் ரெகுலர் பிரஸ்ஸர் பூஃட்-அ பைப்பிங் ஃபூட்டுக்கு ரீப்ளேஸ் பண்ணிகிட்டு அதை சரியான எடத்தில லாக் பண்ணுங்க. நேர்தையலுக்கு பேட்டன் செலக்டார் டயலை 'ஏ'க்கு ரீசெட் பண்ணிகிட்டு தையல் நீளத்தை 2.5க்கு செட் பண்ணுங்க. கூடுதலா கொஞ்சம் பைப்பிங் அப்புறம் பயாஸ் ஸ்ட்ரிப்ப விட்டு தைக்க ஆரம்பிங்க. துணி மேல பைப்பிங் அப்புறம் பயாஸ் ஸ்ட்ரிப் ரெண்டையும் வைச்சு தைக்கறீங்களான்னு பாத்துக்கங்க. எல்லா அடுக்குகளயும் தைக்கறதை உறுதி செய்துக்கங்க. தொடர்ந்து தைக்கறப்ப அட்ஜஸ்ட் பண்ணிட்டே போங்க. நெக் முழுவதும்இதைச் செய்யுங்க. முடியற இடத்துக்கு கொஞ்சம் முன்னால கூடுதல் பைப்பிங் அப்றம் ஆரம்பத்தில உள்ள பயாஸ் ஸ்ட்ரிப்ப மடிச்சு அவற்றின் மேல முனைகளை வையுங்க அப்பதான் ஒரு ஓவர்லாப் உண்டாகும் அதுக்கு மேல தையுங்க. ஓவர்லாப்புக்கு முன்னால தைச்ச பிறகு நிறுத்திட்டு கூடுதலா உள்ள ஃபேசிங் அப்புறம் பைப்பிங்-அ கட் பண்ணிருங்க.























### ஸ்டெப் 6: மெயின் துணியையும் லைனிங்கையும் ஒன்றாக இணைத்தல்

நெக்லைன் முடிஞ்ச பிறகு, பைப்பிங் ஃபூட்ட, ரெகுலர் பிரஸ்ஸர் ஃபூட்-ஆ ரீப்ளேஸ் பண்ணிகிட்டு அதை சரியான இடத்தில லாக் பண்ணுங்க. அடுத்து, லைனிங்கயும் மெயின் துணியையும் ஒன்றா சேர்த்து தைப்போம். முனைகளை மாட்ச் பண்ணிகிட்டு தைக்கத் தொடங்குங்க. மெதுவா, சீரா எல்லா பக்கங்களையும் தையுங்க. வளைவுகள்ல கவனமா இருங்க, தையல் நேர்த்தியா வர கை நடுக்கம் இல்லாம இருக்கறதை உறுதி செய்துகொங்க அதிகமா உள்ள நூலை கட் பண்ணிருங்க. இது முடிஞ்சதும் உங்க தையல் பாக்க இப்படி இருக்கணும்.

### ஸ்டெப் 7: ஸ்லீவ்ஸ் தயாரித்தல்

அடுத்து நாம பாக்க வேண்டியது, ஸ்லீவ்ஸ். துணியிலிருந்து பின்ன எடுங்க. ஸ்லீவோட எட்ஜ நாம ஹெம் பண்ணனும். இதுக்கு ஃபேன்சி அல்லது ஒரு மாட்சிங் பைப்பிங்-அ எடுத்துக்கங்க. இப்ப நாம ஸ்லீவோட எட்ஜ ஹெம் பண்ணனும். இப்ப ஸ்லீவ்ஸ ஓபன் பண்ணி அது மேல லைனிங்க வையுங்க, ரைட் சைட், ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்கணும். இப்ப, டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி பைப்பிங் ஸ்ட்ரிப்ப மெயின் & லைனிங் துணிக்கு இடையில பாட்டம் அலவன்ஸ் சேர்த்து மூணுத்தையும் ஒன்றா பின் பண்ணனும். பைப்பிங்க நீளமா கட் பண்ணி அதே பிராசஸ இன்னொரு ஸ்லீவுக்கும் ரிபீட் பண்ணனும். பின் பண்றப்ப கூடுதல் கவனம் செலுத்தணும். மறுபடியும் கூடுதல் பைப்பிங்கை கட் பண்ணுங்க. இப்ப, மார்க் பண்ணின பகுதி மேல தைக்கணும், அப்பதான் நாம ஸ்லீவ ஃப்ளிப் பண்ணும்போது, அது பாக்க இப்படி இருக்கும்.

பின் பண்ணின ஸ்லீவ்ஸ பைப்பிங் பண்ண மிஷனுக்கு கொண்டுபோங்க பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு பதிலா பைப்பிங் ஃபூட்-ஐ ரீப்ளேஸ் பண்ணிகிட்டு சரியான எடத்தில லாக் பண்ணுங்க. ஸ்லீவோட பின் பண்ணின விளிம்பை ஃபூட்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. தைக்கும்போதே பின்ஸ எடுத்துட்டே போங்க. பைப்பிங் ஃபூட்-அ எப்படி யூஸ் பண்ணனுங்கறதுக்கான விரிவான டுடோரியலுக்கு எங்க www.ushasew.com. வெப்சைட்டை விசிட் பண்ணுங்க. இதையே அடுத்த ஸ்லீவுக்கும் ரிபீட் பண்ணுங்க. ராங் சைட்-ல பாக்கறப்ப தையல் பாக்க இப்படி இருக்கணும். ஆனா இதோட இது முடியல. துணிய ரைட் சைட்-ல திருப்பி, பைப்பிங் மேல பாப் ஆக எட்ஜ்ல தைக்கணும். தைக்க ஆரம்பிங்க, மெதுவா கீழ் நோக்கி சீரா தைக்க ஆரம்பிங்க. இன்னொரு ஸ்லீவுலயும் இதே மாதிரி செய்யுங்க.

இது முடிஞ்சதும், எல்லா ஓபன் விளிம்பையும் தைச்சு லைனிங் துணிய மெயின் துணியோட சேர்த்து தைக்கணும். பைப்பிங் ஃபூட்-அ 'ஏ' ஃபூட்டோட ரீப்ளேஸ் பண்ணி சரியான எடத்தில லாக் பண்ணுங்க. ஸ்லீவோட எட்ஜ பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. பிவோட் டெக்னிக்-அ யூஸ் பண்ணி இதை முழுசா ஒரே தையலா போடுங்க. இன்னொரு ஸ்லீவ்லயும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. நீங்க தைச்சது பாக்க இப்படி இருக்கணும். பைப்பிங்க தைச்சு துணிகளை ஒன்ணா சேர்த்துட்டோம் பாருங்க.









ஸ்டெப் 8: ஸ்லீவ்ஸ் அட்டாச் செய்தல்

இதுவரை நாம, நெக் பைப்பிங் முடிச்சிட்டோம், அப்புறம் லைனிங் துணியையும் மெயின் துணியையும் ஒன்றா தைச்சிட்டோம். அடுத்து, நாம ஆர்ம் ஹோல ஸ்லீவ்ல அட்டாச் பண்ணனும். நாம ஏற்கெனவே ஸ்லீவோட மத்தியில ஒரு நோட்ச் உருவாக்கிட்டோம், அதை ஷோல்டருக்கு நடுவுல மேட்ச் பண்ணுங்க. ஸ்லீவ ரைட் சைட் ரைட் சைட்-அ நோக்கி இருக்க மாதிரி துணி மேல வைச்சு சரியான இடத்தில அதை பின் பண்ணுங்க. நடுப்பகுதில பின் பண்ணின பிறகு, ஆர்ம் ஹோல் சுற்றி மொத்த ஸ்லீவையும் பின் பண்ணுங்க. துணியோட எல்லா அடுக்குலயும் பின் நுழையுதான்னு உறுதி செய்துக்கங்க. இன்னொரு ஸ்லீவ்லயும் இதே புரொசீஜரை ரிபீட் பண்ணுங்க. நடுவுல பின் பண்ணிட்டு அப்புறம் மொத்த ஸ்லீவயும் பின் பண்ணுங்க.


பின் பண்ணின துணிய மிஷினுக்கு கொண்டு போய் ஆர்ம்ஹோல்ல ஸ்லீவ தையுங்க. தொடர்ந்து தைக்கறப்ப பின்ஸ நீக்கிருங்க. மெதுவா, உறுதியா இன்னொரு முனைய நோக்கி தையுங்க. இது முடிஞ்சதும், இன்னொரு ஸ்லீவயும் தையுங்க. இப்ப ஸ்லீவ்ல ஜிக் ஜாக் தையல் போடணும். ஜிக் ஜாக் தையலுக்கு செட்டிங்கை மாத்திட்டு எட்ஜஸ்ல மறுபடியும் தையுங்க. ஒரு ஸ்லீவ் முடிஞ்சதும், இன்னொரு ஸ்லீவ்லயும் ஜிக் ஜாக் தையல் போடுங்க. நீங்க தைச்சது பாக்க இப்படி இருக்கணும்.















**ஸ்டெப் 9: சைட் சீம்ஸ் ஃபினிஷ் செய்து ஜிப்பர் அட்டாச் செய்தல்**

நாம இப்ப ஸ்லீவ்ஸ அட்டாச் பண்ணிட்டோம். இப்ப நாம சைட் சீம்ஸ் வேலைய பாக்கணும். ஆர்ம்ஹோல்ஸ ஒன்றா மேட்ச் பண்ணி சரியான இடத்தில் வைச்சு பின் பண்ணிட்டு அப்புறம் ஸ்லீவ்ஸயும் பிளவுசோட ஒரு பக்கத்திலயும் வெச்சு பின் பண்ணனும். பிளவுசோட இடது பக்கத்தில நாம ஒரு கன்சீல்டட் ஜிப் அட்டாச் பண்ணப்போறோம். முதல்ல, ஆர்ம்ஹோல்ஸ ஜாயின் பண்ணிட்டு  பின் பண்ணிட்டு ஸ்லீவ் போர்ஷனை பின் பண்ணுங்க. ஜிப் ஆர்ம் ஹோலுக்கு அடியில அட்டாச் பண்ணப்படணும். இது ஒரு மறைக்கப்பட்ட ஜிப் அதனால டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி ஜிப்பரோட ரைட் சைட்-அ துணியின் ரைட் சைட்-ல வைக்கணும். இதுல காட்டினபடி ஜிப்பரோட ஒரு பக்கத்தை பிளவுசோட முன்பக்கத்தில வெச்சு பின் பண்ணிட்டு இன்னொரு பக்கத்தை பிளவுசோட பின்பக்கத்துல பின் பண்ணனும். பிளவுசோட ரைட் சைட் சீம்ஸ் தைக்கறதுலேந்து இதைத் தொடங்கலாம். மிஷினை நேர் தையலுக்கு ரீசெட் பண்ணிகிட்டு பிளவுசோட கீழ்ப் பக்கத்திலேந்து தைக்க ஆரம்பிச்சு ஸ்லீவ் முடியற இடம் வரை தையுங்க. நீங்க தைச்சது பாக்க இப்படி இருக்கணும்.

இப்ப நாம இடது பக்கம் போகலாம். அதுக்கு முன்னால ஆர்ம்ஹோல்லேந்து 1.5 அங்குலம் ஒரு மார்கிங்கை உருவாக்குங்க. இந்த மார்கிங்தான் ஜிப் முடியற பாயின்ட்ட குறிப்பிடும். ஸ்லீவ்லேந்து தைக்க தொடங்கி ஆர்ம்ஹோலை நோக்கி தையுங்க, 1.5 மார்கிங் வரை தைச்சிட்டு நிறுத்துங்க. தையல் பாக்க இப்படித்தான் இருக்கும்.

அடுத்து, நாம ஜிப் அட்டாச் பண்ணனும். இதுக்கு. ரெகுலர் ஃபூட்-அ உஷா ஜானோம் ஜிப்பர் பூட்க்கு ரீபிளேஸ் பண்ணி அதை சரியான இடத்தில லாக் பண்ணனும். ஜிப்-அ ஓபன் பண்ணி பின் பண்ணின ஒரு செட் ஜிப்பரை பிரஸ்ஸர் ஃபூட்ல வைச்சு தைக்க ஆரம்பிங்க.



கை நடுங்காமல் ஜிப் சரியா நேர்கோட்ல அட்டாச் ஆகறதை உறுதி செய்துக்கங்க. இது முடிஞ்சதும் அடுத்த பக்கத்தையும் தையுங்க, தைக்கறப்போ பின்ஸ நீக்கிருங்க. இன்னும் ஒரு தையலையும் போடணும். ஜிப்போட பல்லை ஓபன் பண்ணி ஜிப்பர் மூவ்மன்ட்-அ தடுக்காம முடிஞ்சவரை ஜிப்பர் டீத்துக்கு நெருக்கமா சரியான இடத்தில லாக் பண்ண தையுங்க. இது பாதுகாப்பான ஜிப்பர் அட்டாச்மன்ட்-அ உறுதிசெய்யும். இது ஜிப்பரோட ரெண்டு பக்கத்திலயும் செய்யணும்.









அதிகமா உள்ள நூலை கட் பண்ணிருங்க. நாம பிளவுஸ்ல ஜிப்பரை அட்டாச் பண்ணிட்டோம். இப்ப மறுபடியும் ஜிப்பர் ஃபூட்-அ ரெகுலர் ஃபூட்-ஆ ரீப்ளேஸ் பண்ணிட்டு அதை சரியான இடத்தில லாக் பண்ணனும். இப்ப சைட் சீம்ஸ் மேல ஜிக் ஜாக் தையல் போடணும் பேட்டன் செலக்டார் டயலை 'சி'க்கு ரீசெட் பண்ணிகிட்டு தையல் நீளத்தை 1.5ல வைச்சிட்டு ஸ்லீவ்ஸ்லிருந்து தைக்க ஆரம்பிங்க. ஜிப்பரை வந்து அடைஞ்சதும், ரெண்டு சீம் அலவன்ச ஓபன் பண்ணி ஜிப்பரோட ரெண்டு பக்கங்கள்லயும் தனித்தனியா தையல் போடணும். இது திரும்பத் திரும்ப நடக்கற பிராசஸா தோணலாம் ஆனா எங்களை நம்புங்க, ஜிக் ஜாக் தையல் உங்க கிரியேஷனுக்கு ஒரு சுப்பீரியர் ஃபினிஷிங் கொடுக்கும் , விளிம்புகள் பிரிஞ்சு வர்றதை தவிர்க்கவும் இது உதவும். இப்ப பக்கங்கள் ரொம்ப அழகா இல்லை? உங்க ஜிப்பரை செக் பண்ணுங்க கடைசில கொஞ்சம் கூடுதலா ஜிப்-அ விட்டுட்டு மற்றதை கட் பண்ணிருங்க.

ஸ்டெப் 10: பிளவுசின் பாட்டம் ஹெம் ஃபினிஷ் செய்தல்









அடுத்து, நாம பிளவுசோட அடிப்பகுதிய ஹெம் பண்ணலாம். அதுக்கு நாம ஒரு பயாஸ் ஸ்ட்ரிப்ப பாதியா மடிச்சு, அதை பிளவுசோட ரைட் சைட்-ல தைச்சிருவோம்.
பிளவுஸ தையல் மிஷினுக்கு கொண்டு வாங்க. ஜிப்பரை ஓபன் பண்ணி, டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி பிளவுசோட ரைட் சைட்-ல மடிச்ச பயாஸ் ஸ்ட்ரிப்ப வையுங்க. பிரஸ்ஸர் ஃபூட் எட்ஜ் அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. முழுசா தையுங்க, தைக்கறப்ப பயாஸ் ஸ்ட்ரிப்ப மடிச்சு, அட்ஜஸ்ட் பண்ணிட்டே இருங்க. முடியற எடத்துக்கு வந்ததும் நூலை கட் பண்ணுங்க. இப்ப நாம பாட்டம் ஹெம்லைனை தைச்சிட்டோம் அதிகமா உள்ள நூலை கட் பண்ணிருங்க. நீங்க தைச்சு முடிச்சது பாக்க இப்படி இருக்கணும். அடுத்து, கூடுதலா உள்ள ஸ்ட்ரிப்ப ½ இன்ஞ்ச் விட்டு கட் பண்ணிருங்க. இப்ப நாம இதுல காட்டி இருக்க மாதிரி உள்பக்கம் உள்ள பயாஸ் ஃபேசிங் விளிம்பையும், ஃபேசிங் அடிப்பகுதியையும் மடிக்கணும். இப்ப நாம பிளவுசோட அடிப்பகுதி முழுக்க கையால ஹெம் பண்ணுவோம். ஸ்ட்ரிப் சரியான இடத்தில இருக்கறதையும் உங்க தையல் அழகா இருக்கறதையும் உறுதி செய்துக்கங்க. நீங்க இதை செய்து முடிச்சதும், ஜிப்புக்கு அடியில ஒரு ஹூக்-அ சேர்த்து அதன் இடத்தில வைச்சு தையுங்க. ஓபனிங்க செக்யூர் பண்ணவும் ஜிப் தானாவே ஓபனாகறதை தவிர்க்கவும் இது ரொம்ப முக்கியம். இதன் ஐ-அவும் எதிர் பக்கத்தில தைக்க மறந்துராதீங்க. கிட்டத்தட்ட முடிஞ்சிருச்சு.





ஸ்டெப் 11: நெக்லைன் ஃபினிஷ் செய்தல்

இப்ப பிளவுஸ திருப்புங்க, இப்ப நாம கடைசி கட்டம் நெக்லைன் ஹெம்மிங்குக்கு வந்தாச்சு. பயாஸ் ஸ்ட்ரிப்ப உள்நோக்கி ராங் சைட்-ல மடிச்சு கையால தையுங்க. பயாஸ் ஸ்ட்ரிப் முழுக்க தையுங்க. நீங்க கையால தைச்சது பாக்க இப்படி இருக்கணும்.

இப்ப நம்ப பிளவுஸ் ரெடி.